**சுருக்கம்**

பாசனம் – பொதுப்பணித்துறை – வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கவசம்பட்டு கிராமத்திற்கு அருகில் பாலாற்றில் ஒரு பிரிப்புச் சுவர் கட்டுவதற்கும், திசைமாற்றி சுவர்கள் அமைப்பதற்கும், கொட்டாற்றின் இயற்கை நீர்ப்போக்கு தன்மைக்கு புனரமைக்கும் பணி மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.650.00 இலட்சம் செலவினத்திற்கு மாநில நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (ட்டி1) துறை

அரசாணை(நிலை)எண்.33 நாள்: 5.2.2008

சர்வஜித் – தை 22
திருவள்ளுவர் ஆண்டு - 2039

மீண்டும் படிக்க:

அரசு ஆணை (நிலை) எண்.166, பொதுப்பணித்(ட்டி1)துறை, நாள்15.9.2006

மேலும் படிக்க:

சென்னை மண்டலம், தலைமைப்பொறியாளர், அவர்களின் கடித எண்.B2/5757/2007, நாள். 5.10.07.

-------

ஆணை:

பார்வையிற்கண்ட அரசாணையில், 2006–07 ஆண்டிற்கான பகுதி –II திட்டத்தின் கீழ் நபார்டு வங்கியின் நிதி உதவியின் கீழ் வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கவசம்பட்டு கிராமத்திற்கு அருகில் பாலாற்று நீரானது அதிலிருந்து பிரியும் கொட்டாற்றிக்கு சமச்சீராக செல்லும் வகையில் பாலாற்றில் ஒரு பிரிப்புச்சுவர் கட்டுவதற்கும், திசைமாற்றிச் சுவர்கள் கட்டுவதற்கும், கொட்டாற்றை அதன் இயற்கை போக்கிற்கு சீரமைக்கவும், கொட்டாற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைப்பதற்கும் மற்றும் அன்னகுடி பொன்னியம்மன் கண்மாய் வாய்க்காலை புனரமைக்கவும் தேவைப்படும் ரூ.650.00 இலட்சம் மதிப்பீட்டிலான செலவினங்களை மேற்கொள்வதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

2. நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட இப்பணியினை செயல் படுத்த வடிவமைப்பு – கண்காணிப்புப் பொறியாளர், சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டது.

1) மட்டச்சுவரோ (Grade Wall) அல்லது படுக்கை அணையோ (Bed Dam) அமைக்கத் தேவையில்லை – எனவும்
2) கொட்டாற்றிற்கு தண்ணீரை பிரித்து வழங்கும் விதத்தில் பிரிப்புச் சுவரினை (Dividing Wall) கான்க்ரீட்டில் கட்டுவதற்கு பதிலாக உலர் நிறப்பு கற்சுவர் (Groye with dry packing revetment ) கட்டலாம் – என்றும்,
3) பாலாற்றுத் தண்ணீரை கொட்டாற்றிக்கு திசை திருப்பி விடும் விதமாக பிரிப்புச் சுவரின் தலைப்பகுதியில் பாலாற்றின் வலது கரையிலிருந்து அடுத்தடுத்ததாக இரண்டு உலர்

நிறப்பு கற்சுவர்கள் (Groyne) கட்டலாம் என முடிவு செய்யப்பட்டு மதிப்பீடு திருத்தி அமைக்கப்பட்டது.

அதன்படி, இந்த மதிப்பீடு கீழ்கண்டவாறு இறுதியாக்கப்பட்டது.

1) கொட்டாற்றிற்கு தண்ணீரை பிரித்து வழங்கும் விதத்தில் பிரிப்புச்சுவர் (Dividing wall – dry packing revetment) கட்டுதல்,
2) பாலாற்றுத் தண்ணீரை கொட்டாற்றிற்கு திசைமாற்றிவிடும் இரண்டு சுவர்கள் கட்டுதல் ( Groyne – with dry packing revetment)
3) கொட்டாற்றின் இயற்கை நீர்போக்குத் தன்மைக்கு சீரமைத்தல் ( Regrading)
4) கொட்டாற்றின் இடது கரைக்கு பாதுகாப்புச் சுவர் கட்டுதல் (Protection Wall)
5) கொட்டாற்றின் குறுக்கே எல்.கே.புரம் மற்றும் சோலமூர் அருகில் இரண்டு பாலங்கள் கட்டுதல் – மற்றும்
6) அன்னக்குடி பொன்னியம்மன் கண்மாயின் கால்வாயினை புணரமைத்தல்.

3. மேற்காணும் பணியினை நிறைவேற்றுவதன் மூலம் கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்து 1285 ஏக்கர் பாசன வசதி உறுதிபெறும் என்றும், பி.சி.விகிதாச்சாரம் 2.53:1 என்றும், நில எடுப்பு ஏதும் இத்திட்டத்தில் இடம்பெறவில்லை என்றும் இப்பணிக்கு நபார்டு நிதி உதவி கிடைப்பதற்கு தாமதம் ஆகலாம் என்ற காரணத்தால், முக்கியத்துவம் கருதி 2007 – 2008ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள இப்பணிக்கு மாநில அரசு நிதியிலிருந்து ரூ.650.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெற்றுத்தருமாறு தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித்துறை (சென்னை மண்டலம்) கேட்டுக் கொண்டுள்ளார். நபார்டு நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன் செலவு செய்யப்பட்ட மாநில அரசின் நிதியினை ஈடு செய்து கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

4. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சென்னை மண்டலம் அவர்களின் கருத்துருவினை கவனமாக பரிசீலனை செய்து, வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கவசம்பட்டு கிராமத்திற்கு அருகில் பாலாற்று நீரானது அதிலிருந்து பிரியும் கொட்டாற்றிக்கு சமச்சீராக செல்லும் வகையில் பாலாற்றில் ஒரு பிரிப்புச்சுவர் கட்டுவதற்கும், திசைமாற்றிச் சுவர்கள் கட்டுவதற்கும், கொட்டாற்றை அதன் இயற்கை போக்கிற்கு சீரமைக்கவும், கொட்டாற்றின் குறுக்கே இரு பாலங்கள் அமைப்பதற்கும் மற்றும் அன்னகுடி பொன்னியம்மன் கண்மாய் வாய்க்காலை புனரமைக்கவும் தேவைப்படும் ரூ.650.00 இலட்சம் மதிப்பீட்டிலான செலவினங்களை மாநில அரசு நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. தற்பொழுது மாநில அரசு நிதியிலிந்து மேற்கொள்ளப்படும் செலவுகளை பின்னாளில் நபார்டு நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன் தேவையான ஈடு செய்யவும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “4701. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 03. நடுத்தரப் பாசனம் –வணிகத் தன்மை வாய்ந்தது –345. நடுத்தரப் பாசனத் திட்டங்கள்–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II- மாநிலத்திட்டம் – JC - ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி வளர்ச்சி நிதியம் திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் தற்போதுள்ள கொட்டார் ஆறு மற்றும் கவசம்பட்டு கிராமம் அருகே உள்ள பாலாற்றின் குறுக்கே படுகை அணை மற்றும் தடுப்புச் சுவர் கட்டுதல் –16 பெரும்பணிகள் (த.தொ.கு. 4701 – 03 – 345 JC 1605)”

**6.** மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்த, நடப்பு நிதியாண்டிற்கு தேவைப்படும் தொகையினை வரவு செலவு திட்டம் 2007–08ல் மேலே பத்தி 5ல் குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள தொகைக்குள், முதலில் செலவினை மேற்கொள்ள முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு (மற்றும்) தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.5941/PW-II/08 நாள் 4/2/2008–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா,
அரசு செயலாளர்.

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நிர்வள ஆதார அமைப்பு (ம) தலைமைப் பொறியாளர் (பொ) சென்னை – 5
தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை மண்டலம், சென்னை – 5
மாவட்ட ஆட்சியர் வேலூர்.
மாநில கணக்காயர், சென்னை–18/35 (பெயரில்)
மாவட்ட கருவூல அலுவலர், வேலூர்
பொதுப்பணி (I-Spl), சென்னை – 5 (5 நகல்கள்)
நிதி (பொதுப்பணி II /வ.செ.I &II ஆதாரம்–II) துறை, சென்னை – 9.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.